

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று(10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற "காவலர் நாள் விழா 2025" இல், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற காவலர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி அருப்பு மேடு சாலையில் உள்ள கனியமுது திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டு பயனாளிகளுக்கு வகுப்பு சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. , மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர்கள் டீடாசரவணன், விமலா சீனிவாசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ரூ.12.45 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்! ரூ.25 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் - 4.997 பயனாளிகளுக்கு ரூ.216 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

காஞ்சிபுரம், செப். 11 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.9.2025) காஞ்சிபுரம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 12.45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 25.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 4,997 பயனாளிகளுக்கு 215.71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஆரியம்பாக்கம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 30.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தையும், ஊத்துக்காடு ஊராட்சியில் 14.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தையும், பரந்தூர் ஊராட்சியில் 32.80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் இரண்டு வகுப்பறை கட்டடங்களையும், வில்லிவலம் ஊராட்சியில் 30.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தையும், நாயக்கன் குப்பம் ஊராட்சியில் 30.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தையும், உத்திரமேரூர் பேரூராட்சியில் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு மருத்துமனை கட்டடத்தையும், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், கிளக்கடி ஊராட்சியில் 35.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையத்தையும், ஒழையூர் ஊராட்சியில் 35.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலை யத்தையும், நத்தநல்லூர் ஊராட்சியில் 38.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலை யத்தையும் என மொத்தம் 12.45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

மேலும் ஏகனாம்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 98.96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கூடுதல் கட்டடம், உத்திரமேரூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 148.44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 வகுப்பறை கூடுதல் கட்டடம், நாயகன்பேட்டை அரசினர் மேல்நிலை பள்ளியில் 74.22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 வகுப்பறை கூடுதல் கட்டடம், திருப்புலிவனம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 49.48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கூடுதல் கட்டடம், அறப்பாக்கம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 148.44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 வகுப்பறை கூடுதல் கட்டடம், தென்னேரி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 74.22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 வகுப்பறை கூடுதல் கட்டடம், கம்மாளம்பூண்டி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 108.79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கூடுதல் கட்டடம், ஒரகாட்டுப்பேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 74.22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 வகுப்பறை கூடுதல் கட்டடம், திருப்புட்குழி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 98.96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 வகுப்பறை கூடுதல் கட்டடம்,



மேன்னலூர் ஊராட்சியில் 374.90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உத்திரமேரூர் ஏரி உபரி வாய்க்காலின் குறுக்கே உயர் மட்ட பாலம், ஒழையூர் ஊராட்சியில் 490.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒழையூர் ஏரியின் குறுக்கே உயர் மட்ட பாலம், இலுப்பப்பட்டு ஊராட்சியில் 741.30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குதிரைக்கால் மடுவு குறுக்கே உயர் மட்ட பாலம், ஏனாத்தூர் ஊராட்சியில் 45.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் என மொத்தம் 25.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் 3,846 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களையும், 50 நபர்களுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டைகளையும், பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு தானியங்கி மற்றும் பேட்டரி பொருத்தப்பட்ட நான்கு சக்கர நாற்காலிகளையும்,, சமூக நலத்துறையின் சார்பில், முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்தின்கீழ் 17 பயனாளிகளுக்கு வைப்பு பத்திரங்களையும்,

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 6 விவசாயிகளுக்கு டிராக்டர்களையும், 5 விவசாயிகளுக்கு பவர் டில்லர்களையும், மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக 6 தொழில்முனைவோருக்கு காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் மானிய உதவிகளையும், தாட்கோ திட்டத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய வாகனங்களையும், 7 பயனாளிகளுக்கு நலவாரிய உறுப்பினர் அட்டைகளையும், பல்வேறு வங்கிகளின் மூலமாக 157 மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி பயிலுவதற்காக கடனுதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 181 பயனாளிகளுக்கு பயிர்கடன் மற்றும் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 51 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 10 விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள், தார்பாய் மற்றும் விதைகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 9 விவசாயிகளுக்கு தோட்டக்கலை உபகரணங்கள் மற்றும் விற்பனை வாகனங்களையும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 600 பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்பு களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும் என மொத்தம் 4,997 பயனாளிகளுக்கு 215.72 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ரூ.870 கோடி மதிப்பீட்டில்

## நவீன வசதிகளுடன் கட்டப்பட இருக்கும் ‘பிராட்வே’ பேருந்து நிலையம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.11 –

ரூ. 870 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட இருக்கும் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் வடசென்னை வளர்ச்சித் திட்ட த்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் வள்ளலார் நகர் பேருந்து நிலையத்திற்கு மாற்று இடமாக, தற்காலிக பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு சிரமம் ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (9.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் 5வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையங்களில் கட்டுமான பணிகள் நடைபெறுவதால் தற்காலிக பேருந்து நிலையங்களி லிருந்து எம்டிசி பேருந்துகள் இயக்குவது தொடர்பாகவும், பயணிகளுக்கு தேவை யான அடிப்படை வசதிகள் வழங்குவது தொடர்பாகவும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையம் பணிகள் துவங்கவுள்ளதால், தற்காலிக பேருந்து நிலையத்திற்கான மாற்று இடங்களை தேர்வு செய்ய அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது :–

75 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்த பிராட்வே பேருந்து நிலையத்தை முதல்வர் அவர்கள், தொகுதி சார்ந்த தேர்தல் வாக்குறுதிகளின் ஒரு பகுதியாக, மல்டிலெவல் கார் பார்க்கிங்காக மாற்றுவோம் என உறுதி அளித்திருந்தார். யாரும் எதிர்பார்க்க முடியாத வகையில், ரூ. 870 கோடி மதிப்பீட்டில், பிராட்வே பேருந்து நிலையம் அனைத்து நவீன வசதிகளுடனும் புதுப்பிக்கப்பட இருக்கிறது.

பிராட்வே பேருந்து நிலையத்தில் இருந்த கட்டிடங்கள் தற்போது இடிக்கப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 800க்கும் மேற்பட்ட பயணிகள் பயணிக்கும் இந்தப் பேருந்து நிலையத்தில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் பயணிகள் சௌகரியமாக பயணிக்க இரண்டு இடங்களில் – தற்காலிக பேருந்து நிலை யங்களாக இராயபுரம் கிளைவ் பேக்டரி அருகிலுள்ள இடத்திலும் மற்றும் தீவுத்திடல் என இரண்டு இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், வள்ளலார் பேருந்து நிலையமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட இருக்கிறது. அங்கே தினசரி சுமார் 400 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்த பேருந்து நிலையத்தின் பணிகள் தொடங்கும் போது, பொது மக்களுக்கு சிரமம் ஏற்படாமல் இருக்க, மாநகராட்சி 5வது மண்டல அலுவலகம் எதிரில் உள்ள 1 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடம் மற்றும் டான்சிக்கு சொந்தமான 1.50 ஏக்கர் பரப்பளவில் உள்ள மற்றொரு இடம், இரண்டு பிரிவு களாகப் பிரித்து அந்த இடங்களில் பேருந்துகளை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில், மேயர் அவர்களும், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், எம்டிசி மேலா ண்மை இயக்குநர் பிரபு சங்கர், துணை ஆணையாளர் (பணிகள்) சிவகிருஷ்ண மூர்த்தி, ஆர்டிசி ரவி, போக்குவரத்து துறை, காவல் துறை, நீர்வளத் துறை, பொதுப்பணித் துறை, சிஎம்டிஏ, மாநகராட்சி, சென்னை குடிநீர், மின்சாரத் துறை மற்றும் சுற்றுலாத் துறை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தற்காலிக பேருந்து நிலையங்கள் ஒரு மாத காலத்திற்குள் தொடங்க, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தேவையான அனைத்து சிறப்பம்சங் களைச் சேர்ப்பதற்கான உத்தரவை பெற்று, அவர்கள் அறிவுரையின் பேரில் இந்தப் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி. ஆர். பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமர குரு பரன், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ண மூர்த்தி, வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர்மகாவிஷ்ணு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வானூர் சட்டமன்ற தொகுதி, கிளியனூர் ஒன்றியம், உப்புவேலூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.ஆர்.எஸ்.ராஜி, ச.புஷ்பராஜ், ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி, மு.சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, துணை பெருந்தலைவர் தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

### திருப்பத்தூர் ஒன்றியத்தில்

## ரூ.111.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

### அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருப்பத்தூர், செப். 11 -*

*எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் வளர்ச்சிப் பணிகள் அனைத்து துறைகள் வாயிலாக மக்கள் போற்றும் வகையில் நடைபெற்று வருகின்றது.*

*பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலில் திருப்பத்தூர் மாவட்டம் அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றது. திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மக்கள் தேவையறிந்து சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி மக்கள் தேவைகளை அரசிடம் கொண்டு சென்று பணிகளுக்கான அனுமதி பெற்று அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றார்.*

*அதன் தொடர்ச்சியாக திருப்பத்தூர் ஒன்றியம் மாடப்பள்ளி ஊராட்சி (MGNREGS) திட்டத்தில் 16.45லட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டிடம், கிராம நிதி 5.00லட்சம் மதிப்பீட்டில் இ-சேவை மையம், (MGNREGS) திட்டத்தில் 30லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற கட்டிடம், முதல்வரின் கிராம சாலைகள் விரிவாக்க திட்டத்தின் கீழ் 59.65 லட்சம் மதிப்பீட்டில் AAAT சாலை முதல் காவாப்பட்டரை வரை என 111.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய மற்றும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி பணியினை துவக்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் ஒன்றிய சேர்மன்.விஜயா அருணாசலம், துணை சேர் மென். ஞானசேகரன், ஊராட்சி மன்ற தலைவர்.கோமதி கார்த்திகேயன், கவுன்சிலர்.கஸ்தூரிரகு, ஒன்றிய நிர்வாகிகள்.அன்பழகன், விஜயகுமார், சின்ன பையன்,சிவலிங்கம்,விஜயன், ராமச்சந்திரன், உமாகாந்தன், ஆதித்யா பொதுமக்கள் மற்றும் பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், தூய்மை பணியாளர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.*




திருப்பத்தூர் ஒன்றியத்தில் ரூ.111.10 லட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் புதிய சாலை, ஊராட்சிமன்ற கட்டிடத்திற்கு அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்தார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.